**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 210/2023**

**Prosecution witness : அ.சா. 1** **Date :22.01.2025.**

| | |
|---|---|
| **Name : வசந்தா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பரவக்காட்டில் குடியிருந்து கம்பெனியில் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தவர் எனது கணவர் விஜயகுமார் ஆவார். எனது கணவர் உயிருடன் இருக்கும் போது கோழிகளை ஏற்றி இறக்கும் வேலை செய்து வந்தார். கடந்த 10.10.2022ம் தேதி இரவு 08.30 மணிக்கு கறிக்கோழியை வண்டியில் ஏற்றுவதற்காக கோழிப்பண்ணையில் வண்டியில் ஏற்றிக் கொண்டிருந்த சமயத்தில் அப்போது கோழி கூண்டுகளை சரிசெய்து கொண்டிருந்த போது லாரியின் ஓட்டுநர் வாகனத்தை பின்னால் இயக்கியதால் வேறு நபர் நிலைதடுமாறி அருகிலிருந்த மின்சார கம்பியில் மோதியது. எனது கணவர் மீது மின்சாரம் பாய்ந்து படுகாயம் அடைந்து ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்ற பின்னர் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்ற போது எனது கணவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

2) பிறகு இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார்

என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) எனக்கு தகவல் எங்கிருந்து கிடைந்தது என்றால் வாழப்பாடி என் வீட்டில் இருக்கும் போது கலை அமுதன் என்பவர் எனக்கு போன் மூலமாக தகவல் கூறினார். அன்றிரவே நான் வந்து விட்டேன். காவல் நிலையத்திற்கு மறுநாள் காலை சென்றேன். புகாரை காவல் நிலையத்தில் வைத்து எழுதி கொடுத்தேன். ஈச்சர் வாகனத்தை ஓட்டிய நபர் மற்றும் அதன் பதிவெண் குறித்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4) மற்றொரு காயம் அடைந்த நபர் பற்றிய விவரம் தெரியாது என்றால் ஆமாம். கோழியை எங்கு இறக்க வந்தார்கள் என்ற விவரம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனரா என்றால் புகார் அளித்த அன்று என்னை போலீசார் விசாரித்தனர், அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

5) என்னை விசாரித்த சமயத்தில் வேறு யாரை விசாரணை செய்தார்கள் என்றால் என் மகன் சூர்யாவை விசாரித்தார்கள் வேறு நபர் பெயர் தற்போது நினைவில்லை. விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்பதை நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 210/2023**

**Prosecution witness : அ.சா. 2** **Date :22.01.2025.**

| | |
|---|---|
| **Name : சூர்யா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பரவக்காட்டில் குடியிருந்து கட்டுமானம் சம்மந்தமான வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தவர் எனது அப்பா விஜயகுமார் ஆவார். அ.சா.1 எனது தாயார் ஆவார். எனது கணவர் உயிருடன் இருக்கும் போது கோழிகளை ஏற்றி இறக்கும் வேலை செய்து வந்தார். கடந்த 10.10.2022 ம் தேதி இரவு 08.30 மணிக்கு கறிக்கோழியை வண்டியில் ஏற்றுவதற்காக கோழிப்பண்ணையில் வண்டியில் ஏற்றிக் கொண்டிருந்த சமயத்தில் விபத்து ஏற்பட்டதாக கலை அமுதன் என்பவர் போன் மூலமாக சொன்னார்.

2) கலை அமுதன் என்னிடம் எனது தந்தையார் கோழி கூண்டுகளை சரிசெய்து கொண்டிருந்த போது லாரியின் ஓட்டுநர் வாகனத்தை பின்னால் இயக்கியதால் ஜெகதீஸ் என்பவர் நிலைதடுமாறி அருகிலிருந்த மின்சார கம்பியில் தாக்கி காயமடைந்தார். கீழே நின்று கொண்டிருந்த எனது தகப்பனார் மீது மின்சாரம் பாய்ந்து படுகாயம் அடைந்து ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்ற பின்னர் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்ற போது எனது தகப்பனார் இறந்துவிட்டதாக மருத்துவர் சொன்னார்கள்.

2) பிறகு இது சம்மந்தமாக அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார்மனு

கொடுத்தார். அப்போது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) எனக்கு தகவல் எங்கிருந்து கிடைந்தது என்றால் வாழப்பாடி என் வீட்டில் இருக்கும் போது கலை அமுதன் என்பவர் எனக்கு போன் மூலமாக தகவல் கூறினார். அன்றிரவே நான் வந்து விட்டேன். காவல் நிலையத்திற்கு மறுநாள் காலை சென்றேன். புகாரை காவல் நிலையத்தில் வைத்து எனது தாயார் எழுதி கொடுத்தார் என்றால் ஆமாம். ஈச்சர் வாகனத்தை ஓட்டிய நபர் மற்றும் அதன் பதிவெண் குறித்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4) மற்றொரு காயம் அடைந்த நபர் பற்றிய முழு விவரம் தெரியாது என்றால் ஆமாம். கோழியை எங்கு இறக்க வந்தார்கள் என்ற விவரம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனரா என்றால் புகார் அளித்த அன்று என்னையும் எனது தாயாரையும் போலீசார் விசாரித்தனர், அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

5) என்னை விசாரித்த சமயத்தில் வேறு யாரை விசாரணை செய்தார்கள் என்றால் எனது தாயார் மற்றும் முருகேஷ், கருப்பண்ணன் ஆகியோரை விசாரித்தார்கள். விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்பதை நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் ஆமாம். போலீசார் விசாரிக்கும் போது நான் இ ந்த விபத்து யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்பதையும், வாகன ஓட்டுநரின் பெயர் மற்றும் முகவரி மற்றும் வாகனத்தின் பதிவெண் ஆகியவைகளை சொல்லவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 210/2023**

**Prosecution witness : அ.சா. 3** **Date :22.01.2025.**

| | |
|---|---|
| **Name : சித்தார்த்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொன்னாரம்பட்டி குடியிருந்து தற்போது கல்லூரியில் படித்து வருகிறேன். கல்லூரி வேலை நாட்கள் தவிர மற்ற நாட்களில் கோழிகளை ஏற்றி இறக்கும் வேலை செய்து வந்தேன். நான் சம்பவ சமயத்தில் கலை அமுதன், வெங்கடேஷ், விஜயகுமார் ஆகியோருடன் லோடு ஏற்றி இறக்கும் வேலை செய்து வந்தேன். கடந்த 10.10.2022ம் தேதி இரவு 08.30 மணிக்கு கலை அமுதன், வெங்கடேஷ், விஜயகுமார் ஆகியோருடன் வேலை செய்த போது, நாங்கள் தாரமங்கலம் பகுதியில் உள்ள கோழிப்பண்ணையில் கோழிகளை ஏற்ற சென்றேன்.

2) நாங்கள் அசோக் லேலேண்ட் லாரியில் கோழிகளை ஏற்றிக் கொண்டிருந்தோம். நானும் கலைஅமுதன் மேலே அமர்ந்து கோழி அடைக்கும் வளை கூண்டு அடுக்கிக் கொண்டிருந்தோம். கடைசியாக 40 கோழி கூண்டு காலியாக இருந்தது. அப்போது கோழி வண்டியின் ஓட்டுநர் பின்நோக்கி வண்டியை எடுத்த போது மின்சாரம் பாயும் கம்பி மேலே இருந்தது. கிளினர் பையன் அந்த லைன் இருப்பதை பார்க்காமல் மேலே ஏறி மின்சார கம்பி மீது உரசிவிட்டார்.

3) அப்போது குமார் கீழே நின்று கொண்டிருந்தார். அப்போது மழை பெய்து ஈரமாக இருந்த நிலையில் வண்டியின் கம்பியை இருக்கி பிடித்த நிலையில் காலில் பாத அணிகள் அணியாத நிலையில் மேலே இருந்தவர் மீது பாய்ந்த மின்சாரம் வாகனம் முழுவதும் பாய்ந்து வண்டியை பிடித்துக் கொண்டிருந்த நபருக்கும் காயம் ஏற்பட்டது.

4) விஜயகுமார் என்பவர் மின்சாரம் தாக்கியதால் கீழே விழுந்துவிட்டார். நானும் கலைஅமுதன் என்பவரும் காலில் ஷூ இருந்ததால் எங்களுக்கு மின்சாரம் பாயவில்லை. பிறகு காயம் பட்ட விஜயகுமாரை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்து பின்னர் இறந்துபோய்விட்டார்.

5) மேலே நின்று கொண்டிருந்த நபருக்கும் காயம் ஏற்பட்டு அவர் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். கூண்டு வண்டி ஓட்டுநரை நான் பார்த்துள்ளேன். தற்போது பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

6) இந்த விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் லாரி கிளினரின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது. எதன் காரணமாக கிளினர் மீது தவறு உள்ளதாக சொல்கிறேன் என்றால் பண்ணைகாரர் உள்ளே வாகனத்தை கொண்டு செல்லும் போதே மேலே மின்சார கம்பி உள்ளதாக முன்னெச்சரிக்கை செய்து விட்டார்.

7) அதனை கவனிக்காமல் கிளினர் செயல்பட்டதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்று சேலம் அரசு மருத்துவமனையில் விசாரித்தார்கள், பிறகு

விசாரிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். என்னை விசாரிக்கும் போது வேறு யாரை விசாரித்தார்கள் என்றால் கலை அமுதன் மற்றும் வெங்கடேஷ் ஆகியோரை விசாரித்தார்கள்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 210/2023**

**Prosecution witness : அ.சா. 4** **Date :22.01.2025.**

| | |
|---|---|
| **Name : வெங்கடேஷ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பொன்னாரம்பட்டி குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.3 சித்தார்த் எனக்கு தெரியும். விபத்தில் இறந்து போன விஜயகுமார் எனக்கு தெரியும். நான் சம்பவ சமயத்தில் கலை அமுதன், அ.சா.3, விஜயகுமார் ஆகியோருடன் லோடு ஏற்றி இறக்கும் வேலை செய்து வந்தோம். கடந்த 10.10.2022 ம் தேதி இரவு 08.30 மணிக்கு கலை அமுதன், அ.சா.3 விஜயகுமார் ஆகியோருடன் வேலை செய்த போது, நாங்கள் பனிக்கனூர் பகுதியில் உள்ள கோழிப்பண்ணையில் கோழிகளை ஏற்ற சென்றோம்.

2) எங்களை சேலம் IB பம்பெனியில் கோழிகளை ஏற்றி இறக்கும் வேலை செய்வதற்காக அழைத்தார்கள். நாங்கள் அசோக் லேலேண்ட் லாரியில் கோழிகளை ஏற்றுவதற்காக சென்றோம். அங்கு சென்று நானும் விஜயகுமார் என்பவரும் கீழே இருந்து கூண்டுகளை ஏற்றிக் கொடுத்தோம். மேலே அ.சா.3 மற்றும் கலைஅமுதன் மேலே அமர்ந்து கோழி அடைக்கும் வளை கூண்டு அடுக்கிக் கொண்டிருந்தார். கிளினர் மேலே அமர்ந்து கூண்டுகளுக்கு கயிறு கட்டிக் கொண்டிருந்தார். அப்போது கோழி வண்டியின் ஓட்டுநர் பாதி லோடுகளை ஏற்றும் நிலையில் பாதி 50 மீட்டர் தள்ளி உள்ள நிலையில் கிளினர்

மேலே இருந்தது தெரியாமல் ஓட்டுநர் பின்நோக்கி வண்டியை எடுத்த போது மேலே இருந்த கிளினருக்கு உடல் முழுவதும் மின்சாரம் தாக்கியதால் கொப்பளக்காயம் ஏற்பட்டது. விஜயகுமார் என்பவர் காலில் செருப்பு இல்லாமல் வண்டியை பிடித்ததால் மின்சாரம் தாக்கி கீழே விழுந்துவிட்டார்.

3) நான் அருகில் இருந்ததால் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். அ.சா.3 கலைஅமுதன் என்பவரும் காலில் ஷு இருந்ததால் அவர்களுக்கு மின்சாரம் பாயவில்லை. பிறகு காயம் பட்ட விஜயகுமாரை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்து பின்னர் இறந்துபோய்விட்டார்.

5) மேலே நின்று கொண்டிருந்த நபருக்கும் காயம் ஏற்பட்டு அவர் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். கூண்டு வண்டி ஓட்டுநரை நான் பார்த்துள்ளேன். தற்போது பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

6) இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் விபத்து நடந்த இரவே சேலம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்த போது வேறு யாரை விசாரித்தார்கள் என்றால் சித்தார்த், கலைஅமுதனை விசாரித்தார்கள்.

7) போலீசார் என்னை விசாரித்த போது தற்போது கூறியவாறு தான் சொன்னேன். வாகனத்தின் பதிவெண்ணை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. ஓட்டுநர் மற்றும் கிளினரின் பெயர், விவரம் சொல்லவில்லை என்றால் ஆமாம். யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றால்

கிளினர் மற்றும் ஓட்டுநரின் தவறால் ஏற்பட்டது. நாங்கள் கிளினரை லாரியில் ஏற வேண்டாம் என்று எச்சரித்தும் கேளாமல் அவர் லாரியில் ஏறிவிட்டார். அவர் லாரியில் ஏறியதால் தான் விபத்து ஏற்பட்டது.

8) கிளினர் லாரியில் ஏறாமல் இருந்திருந்தால் விபத்து ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான். கிளினர் லாரியில் ஏறிய விவரத்தை ஓட்டுநரிடம் சொல்லவில்லை என்றால் ஆமாம். டிரைவரிடம் சொல்லிவிட்டு கிளினர் மேலே ஏறியிருந்தால் வண்டியின் ஓட்டுநர் வாகனத்தை இயக்கியிருக்கமாட்டார் என்றால் சரிதான். கிளினரின் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான்.

9) நான் கிளினரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டதாக போலீசார் விசாரிக்கும் போது சொன்னேன் என்றால் ஆமாம். ஓட்டுநரின் தவறு உள்ளதாகவும் சொன்னேன். எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றும், வாகனத்தின் கிளினரின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் விபத்து இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கு பொய்யாக ஜோடிக்கப்பட்டது என்றும் அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10) நானும் இறந்து போன விஜயகுமார் இருவரும் கீழே இருந்த கோழி பெட்டிகளை வண்டியில் ஏற்றுவதற்காக ஓட்டுநரிடம் வண்டியை பின்புறமாக எடுக்க சொன்னோம். கிளினர் வாகனத்தின் மேலே இருந்த விவரம் ஓட்டுநருக்கு தெரியுமா என்றால் தெரியாது. கிளினர் மேலே இருந்த விவரத்தை ஓட்டுநரிடம் கூறவில்லையா என்றால் நாங்களும் கிளினர் வாகனத்தின் மேலே இருந்ததை பார்க்காத காரணத்தால் ஓட்டுநரிடம் கூறவில்லை.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 210/2023**

**Prosecution witness : அ.சா. 5** **Date :22.01.2025.**

| | |
|---|---|
| **Name : கலை அமுதன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் பொன்னாரம்பட்டி குடியிருந்து தற்போது சென்னையில் IT நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.3 சித்தார்த் எனக்கு தெரியும். விபத்தில் இறந்து போன விஜயகுமார் எனக்கு தெரியும். நான் சம்பவ சமயத்தில் அ.சா.3, அ.சா.4, விஜயகுமார் ஆகியோருடன் லோடு ஏற்றி இறக்கும் வேலை செய்து வந்தோம். கடந்த 10.10.2022ம் தேதி இரவு 08.30 மணிக்கு அ.சா.3, 4 விஜயகுமார் ஆகியோருடன் வேலை செய்த போது, நாங்கள் பனிக்கனூர் பகுதியில் உள்ள கோழிப்பண்ணையில் கோழிகளை ஏற்ற சென்றோம்.

2) நாங்கள் அசோக் லேலேண்ட் லாரியில் கோழிகளை ஏற்றுவதற்காக சென்றோம். அங்கு சென்று வெங்கடேஷ் மற்றும் விஜயகுமார் என்பவரும் கீழே இருந்து கூண்டுகளை ஏற்றிக் கொடுத்தார்கள். மேலே நான் மற்றும் அ.சா.3 மேலே அமர்ந்து கோழி அடைக்கும் வளை கூண்டு அடுக்கிக் கொண்டிருந்தோம். கிளினர் மேலே அமர்ந்து கூண்டுகளுக்கு கயிறு கட்டிக் கொண்டிருந்தார். ஓட்டுநர் பின்நோக்கி வண்டியை எடுத்த போது மேலே இருந்த கிளினர் சற்று எழுந்த போது உடல் முழுவதும் மின்சாரம் தாக்கியதால் காயம் ஏற்பட்டது. விஜயகுமார் என்பவர் காலில் செருப்பு இல்லாமல் வண்டியை

பிடித்ததால் மின்சாரம் தாக்கி கீழே விழுந்துவிட்டார்.

3) நான் அருகில் இருந்ததால் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். நான் மற்றும் அ.சா.3 என்பவரும் காலில் ஷூ இருந்ததால் எங்களுக்கு மின்சாரம் பாயவில்லை. பிறகு காயம் பட்ட விஜயகுமாரை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்து பின்னர் இறந்துபோய்விட்டார்.

5) மேலே நின்று கொண்டிருந்த நபருக்கும் காயம் ஏற்பட்டு அவர் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். கூண்டு வண்டி ஓட்டுநரை நான் பார்த்துள்ளேன். தற்போது பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

6) இந்த வழக்கு சம்மந்தமாக சேலம் அரசு மருத்துவமனையில் சம்பவதினத்தன்று இரவு 10 மணியளவில் விசாரித்தனர். அதன் பின்னிட்டு என்னை விசாரித்தனரா என்றால் இல்லை. என்ன காரணத்திற்காக டிரைவர் லாரியை பின்னோக்கி எடுத்தார் என்றால் 120 பெட்டி கோழிகளை வாகனத்தில் ஏற்றியது போக மிச்சம் 140 பெட்டி கோழிகள் லாரியிலிருந்து 30 அடி தொலைவில் இருந்த காரணத்தினால் ஏஜென்ட்டான வெங்கடேஷ், விஜயகுமார் ஆகியோர் லாரியை பின்னோக்கி எடுத்து வர சொன்னார்கள்.

7) அதன் காரணமாக லாரியின் ஓட்டுநர் வாகனத்தை பின்னோக்கி எடுத்து வந்தார். கீழே இருந்த வெங்கடேஷ் மற்றும் விஜயகுமார் ஆகியோர் வாகனத்தின் மேலே கிளினர் இருந்த விவரத்தை ஓட்டுநரிடம் தெரிவித்தார்களா என்றால் இல்லை. கிளினர் எங்களின் எச்சரிக்கையை மீறி மேலே ஏறிவிட்டார். அதனால் கிளினரின் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

8) போலீசார் விசாரிக்கும் போதும், கிளினரின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்ற விவரத்தை கூறியுள்ளோம் என்று சொன்னால் சரிதான். போலீசார் விசாரணையின் போது வாகன ஓட்டுநரின் பெயர் முகவரி மற்றும் வாகனத்தின் பதிவெண் ஆகியவைகளை சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கு பொய்யாக ஜோடிக்கப்பட்டது என்றும் அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.